Registered as a Newspaper
பக்கங்கள் 16 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 17

புதன்கிழமை
13 டிசெம்பர் 2023

கார்த்திகை 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"வேலியே பயிரை மேய்ஞ்ச கதையா உவர் பூசாரியும் சாமிக்கே நாமம் போட்டிருக்கிறார் கண்டியளோ"



# புத்தாண்டில் நாடு மீளும்!

## பல நாடுகள் உதவத் தயார்
## அமைச்சர் பந்துல நம்பிக்கை

**கொழும்பு, டிசெம்பர் 13**

**இந்தியா, சீனா, பிரான்ஸ் என்பன இலங்கைக்குச் சலுகைகளை வழங்கச் சம்மதித்துள்ளன. இதனால், எதிர்வரும் காலங்களில் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மேலும் மீளும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

15

# உறவுகளை நினைவுகூர்ந்தவர்கள் சி.ஐ.டி., ரி.ஐ.டி. விசாரணைக்குள்!

## நாடாளுமன்றில் நேற்று சிறீதரன் சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 13

போரால் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரும் உரிமைகூட தமிழர்களுக்கு இல்லையா? வடக்கு - கிழக்கிலுள்ள இளைஞர்கள் சி.ஐ.டி., ரி.ஐ.டி.க்கு அழைத்து விசாரிக்கப்படுகின்றனர். இந்த நாடு யாருக்குச் சொந்தம்? உங்களுக்குச் சொந்தமெனில் தமிழர்களை அழித்துவிடுங்கள். எதற்காக வஞ்சிக்கின்றீர்கள்? போலி நல்லிணக்கம் தொடர்பில் பேசவேண்டாம். தமிழர்களை நிம்மதியாக வாழவிடுங்கள் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை

15

## அடுத்தவருடம் முதல்
# விளையாட்டுப் பாடசாலைகள்

கொழும்பு, டிசெ. 13

ஒவ்வொரு விளையாட்டுக்களிலும் தமது திறமையை வெளிப்படுத்திவரும் பாடசாலைகளை விளையாட்டுத்துறைப் பாடசாலைகளாக நியமித்து, அவற்றை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி வேளையில் பிரேம்நாத் சீ தொலவத்த

15

# விக்கிரகங்களைத் தகர்த்து தங்க நகைகள் திருட்டு

## கைதானார் பூசகர்

யாழ்ப்பாணம், டிசெ. 13

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள ஆலயங்களின் விக்கிரகங்களைக் கிளப்பி, அதற்குக் கீழ் உள்ள பொற்காசுகள் மற்றும் நகைகள் என்பவற்றைத் திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

15

## வடக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட
# புதிய நெல்லாலேயே பெரும் பயிரழிவு!

## விவசாயக் குழுக்கூட்டத்தில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 13

தேசிய அளவில், வடக்கில் மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட ஜி.பி.406 இன நெல்லினமே இம்முறை தத்தித் தாக்கத்துக்குக் காரணம் என்று விவசாயத் திணைக்

15

# தத்திகள் தாக்கம்; இழப்பீடு இல்லை!

யாழ்ப்பாணம், டிசெ. 13

தத்திகளின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படமாட்டாது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

15







மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் ஊடக அனுசரணையில் தொழில்வழிகாட்டி கருத்தமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 13

உதயன் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் பாடசாலை மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டி கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஏ.ஐ.ஈ.எஸ்.ஈ.சி. அமைப்பால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்தக் கருத்தரங்குகள் தரம் - 10 தொடக்கம் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாணவர்களுக்கான கருத்தரங்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 10.30 மணி வரையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாணவர்களுக்கான கருத்தரங்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 10.30 மணி வரையில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னரும் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# உடைப்பெடுக்கும் அபாயத்தில் குஞ்சுக்கோடாலிக்கல்லுக்குளம்!



## சீரமைப்பில் குளறுபடி என்று விவசாயிகள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, டிசெ. 13

**சியாப் திட்டத்தின்கீழ் 35 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட ஒட்டுசுட்டான் கமநலசேவைப்பிரிவின்கீழ் உள்ள குஞ்சுக்கோடாலிக்கல்லுக்குளம் தற்போது ஆபத்தான நிலையில் காணப்படுகிறது என்று விவசாயிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.**

இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வரும்போதே குளத்தின் புனரமைப்பில் சரியான கண்காணிப்பு செய்யப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆயினும் திணைக்கள அதிகாரிகள் இதுதொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காது அசண்டையீனப் போக்கைக் கடைப்பிடித்தனர். தற்போது மழை வெள்ளம் அதிகமாகி குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் குளத்தின்நீர்திறக்கும்ஒரு பகுதி தாள் இறங்கியுள்ளது.

புதிதாக போடப்பட்ட குளக்கட்டின் மண்அணைகளிலும் வெடிப்புகள் ஏற்பட்டு குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலையில் காணப்படுகின்றது. உரிய அதிகாரிகள் இனியேனும் இது தொடர்பில் கவனம் செலுத்தி குளத்தின் அபாயக் கட்டத்தைத் தவிர்க்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ச-19)



## வீதியை மறைத்து பாயும் வெள்ளநீர்

கிளிநொச்சி, டிசெ. 13

கிளிநொச்சியில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டாவளை - சுண்டிக்குளம் சந்தியூடாக கல்லாறு மற்றும் சுண்டிக்குளம் கடற்கரை செல்லும் பிரதான வீதியை வெள்ளநீர் குறுக்கறுத்துப் பாய்கின்றது.

இதனால் குறித்த வீதியூடாகப் பயணிப்பதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன் அங்குள்ள வீடுகளுக்குள்ளும் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதால் குடியிருப்பாளர்கள் அயல்வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். (ச-27)

## எகிறுகின்றது சம்பா விலை!

### நுகர்வோர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.13

அரிசி வியாபாரிகள் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலையை 30 ரூபாவால் அதிகரித்துள்ளனர் என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இலங்கையின் பிரதான அரிசி நிறுவனம் ஒன்று 230 ரூபாவுக்கு விற்கப்பட்ட சம்பா அரிசியை 260 ரூபாவாக உயர்த்தியுள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, சம்பா அரிசியின் விலையை மற்றொரு நிறுவனம் 245 ரூபாவாக அதிகரித்துள்ளது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-இ)

## அதிகரிக்கும் மரணங்கள்!

கொழும்பு, டிசெ.13

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிக எண்ணிக்கையான மரணங்கள் 2022ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளன என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 337 இறப்புகள் பதிவாகியுள்ளன. 2022ஆம் ஆண்டு இறப்பு எண்ணிக்கை ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 792 ஆக அதிகரித்துள்ளது.

2016 இல் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 936 என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## குவிக்கப்பட்ட கற்களால் மக்கள் சிரமம்

கொழும்பு, டிசெ.13

மானிப்பாய் பட்டினசபை வீதியில், வீதிச்சீரமைப்புக்காகக் குவிக்கப்பட்டுள்ள கற்களால் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீதியில் போடப்பட்ட கற்கள் ஒழுங்குமுறையில் போடப்படாமை, வீதி வேலைகள் இடம்பெறுவதற்கான போக்குவரத்து குறியீடுகள் வீதியில் இன்மை என்பவற்றால் விபத்துகள் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-27)

## பாரதியார் பிறந்தநாள்

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 141 ஆவது பிறந்ததின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நல்லூர் அரசடிச் சந்தியில் அமைந்துள்ள மகாகவி பாரதியாரின் உருவச் சிலையடியில் இடம்பெற்றது.

தமிழ் ஆர்வலர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ்ப் புலமையாளர் கலாபூஷணம் கே. எஸ். சிவஞான ராஜா பங்கேற்று மகாகவி பாரதியார் தமிழுக்குச் செய்த தொண்டுகள் தொடர்பில் உரையாற்றினார். தொடர்ந்து பாரதியாரின் உருவச் சிலைக்கு முன்பாக மலர்கள் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. (ச-66)



## அதிசய நிகழ்வைப் பார்க்க வாய்ப்பு!

கொழும்பு, டிசெ.13

'ஜெமினிட்ஸ்' விண்கல் பொழிவைக் காணும் வாய்ப்பு இந்தவாரம் இலங்கையர்களுக்குக் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி இந்த வானியல் நிகழ்வை இலங்கையர்கள் அவதானிக்க முடியும் என்று ஆர்தர் சி கிளார்க் நிலையம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி இரவு 9 மணிக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு தெளிவான வான்பகுதியில் இதை அவதானிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## தபாலக ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, டிசெ.13

தபால் ஊழியர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாக நாடளாவிய ரீதியில் நேற்று இரண்டாவது நாளாக தபாலகங்கள் மூடப்பட்டிருந்தன.

தபாலகத்துக்கு வந்தவர்கள் ஏமாற்றத்தோடு திரும்பிச்செல்வதைக் காணக் கூடியதாக இருந்தது.

கடிதங்கள் அனுப்ப வந்தவர்கள், பணம் பெற வந்தவர்கள், மின்சாரக் கட்டணங்களைச் செலுத்த வந்தவர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் வந்து ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்வதை காணக் கூடியதாக இருந்தது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வருமானத்தை அதிகரிக்க பலப்படுத்தப்படும் சட்டம்

**கொழும்பு, டிசெ.13**

**நாடு இழக்கக்கூடிய வருமானத்தை மீளப் பெறுவதற்கு அரசாங்கம் முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

தற்போதுள்ள சட்டங்களைப் பலப்படுத்துவதன் மூலம் சாத்தியமான அனைத்து ஓட்டைகளையும் அடைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மதுப் போத்தல்களில் போலியாக ஸ்டிக்கர் அச்சிடப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், அது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவித்தார்.

கலால் அதிகாரிகள் 6 மாதங்களுக்கு ஒருமுறை இடமாற்றம் செய்யப்படுவார்கள், மேலும் ஊடுருவல் கமரா அமைப்புகள் மூலம் உற்பத்திச் செயல்முறை கண்காணிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## வலி நிவாரணி மாத்திரைகள் மீட்பு!

கொழும்பு, டிசெ.13

தமிழகத்தின் இராமேஸ்வரத்திலிருந்து நாட்டுப் படகில் இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பல இலட்சம் மதிப்புள்ள வலி நிவாரணி மாத்திரைகளை இந்தியக் கடலோர காவல் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இரகசியத்தகவலுக்கு அமைய கடற்பரப்பில்திடீர்ச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியக் கடலோர காவல் படையினர் படகைக் கைப்பற்றியுள்ளனர்.

படகில் பயணித்தவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், 18 மூடைகளில் பல இலட்சம் மதிப்புள்ள வலி நிவாரணி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-100)

## தபால் ஊழியர் சிக்கலை தீர்ப்பதற்கு நடவடிக்கை!



தபால் தொழிற்சங்கங்களின் உள்ளகப் பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடியுள்ளதுடன், தீர்வுகளை முன்வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

தபால்துறைசார் தொழிற்சங்கங்களின் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை மற்றும் அதனை நிவர்த்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தொலவத்த சபையில் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், தபால் திணைக்களம் தொடர்ந்து நட்டமடைந்து வரும் நிலையில் அதை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தபால்துறைக்குச் சமமான சேவையை வழங்கும் தனியார் நிறுவனங்கள் தொழிற்சங்கங்களின் போராட்டத்துக்குப் பின்னால் இருப்பதாகச் சந்தேகம் எழுகின்றது. தபால் தொழிற் சங்கங்கள் முன்வைக்கும் பிரதான கோரிக்கைகள் இரண்டும் கொள்கை ரீதியானது. இதற்கு எம்மால் தீர்வு வழங்கமுடியாது. நுவரெலியா தபால் நிலையம் அபிவிருத்தி திட்டத்துக்கு வழங்கப்படுகின்றபோதும் அதற்குப் பதிலாகப் பிறிதொரு இடம் பெற்றுக் கொடுக்கப்படும் என்று தெரிவித்தார். (எ-இ)

## 2 தினங்களில் 12 பேர் மாயம்

கொழும்பு, டிசெ.13

நாடளாவிய ரீதியில் இரு தினங்களில் 12 பேர் காணாமற்போயுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொரலஸ் கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவனும் தருமபுரம் நாதன்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுவனும், அட்டன்பொல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 16 வயதுச்சிறுவனும், புனர்வாழ்வு மையமொன்றிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் கடந்த 10ஆம் திகதி இரவு தப்பிச் சென்றுள்ளனர்.

நுவரெலியாவைச் சேர்ந்த 18 வயது யுவதி ஒருவரும், பொத்துவில் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய பெண் ஒருவரும், எந்தேரமுல்லயைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவரும் காணாமற்போயுள்ளனர். (எ-இ)

## கோழி இறைச்சி விலை உயர்வு!

கொழும்பு, டிசெ. 13

பண்டிகைக் காலத்தையொட்டி சந்தையில் ஒருகிலோ கோழி இறைச்சியின் விலையை அதிகரிக்க மொத்த வியாபாரிகள் தீர்மானித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, ஒருகிலோ கோழி இறைச்சி 30 முதல் 50 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய ஒரு கிலோகோழி இறைச்சி ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்கப்பட்ட நிலையில் ஆயிரத்து 250 ரூபாவுக்கு உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## அவுஸ்திரேலியாவுடன் "சோலர்" ஒப்பந்தம்!

அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட யுனைட்டெட் 'சோலர்' குழுமத்துடன் மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்மூலம் ஆயிரத்து 500 மெகாவோல்ட் மின்கல ஆற்றல் சேமிப்புடன் 700 மெகாவோல்ட் சூரிய மின்சக்தித் திட்டத்தில் முதலீடு செய்யப்படும்.

ஆயிரத்து 727 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் கிளிநொச்சி, பூநகரிக் குளத்தின் மேற்பரப்பில் சூரியசக்தித்திட்டம் நிறுவப்படவுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். (எ-இ)

## புதினம் தெரியுமோ?

**எ**ப்பவுமே பள்ளிக்கூடங்களில பதவியில இருக்கிறவை தங்கட காலத்தில நல்ல ரிசல்ட்டை பிள்ளையள் எடுக்கவேணும் எண்டு விரும்புவினம். அப்பிடி வந்தால்தான் அவைக்குப் பெருமை. இல்லாட்டி எல்லாப்பக்கத்தில இருந்தும் தொட்டதுக்கும் நொட்டையள் தெறிக்கும். அதில இருந்து தப்புறதுக்காக நல்லாப் படிக்கிற பிள்ளையள் வேற பள்ளிக்கூடங்களுக்கு பறந்துபோகாமல், கரப்புப் போட்டு மூடிவைச்சிருப்பினம். ஆனால் அதுக்குள்ளாலையும் உச்சிக்கொண்டு வேற பள்ளிக்கூடங்களுக்கு மாறுறபிள்ளையளும் இருக்குத்தான். அப்பிடியான நேரங்களில இவ்வளவுநாளும் 'படிக்கிற பிள்ளை' எண்டு காட்டின அக்கறையைத் தூக்கி எறிஞ்சு போட்டு, பள்ளிக்கூடத்தில எல்லாருமே பத்திரகாளியா மாறிடுவினம்.

அப்பிடியான சம்பவங்கள் வடமாரட்சியில அமோகமா நடக்குது. ஏற்கனவே கொலசிப் ரிசல்ட் வந்தபிறகு பள்ளிக்கூடம் மாற வெளிக்கிட்ட பிள்ளைக்கு என்ன நடந்தது எண்டு பட்சி சொல்லியிருக்கு. அதை மாதிரி இப்ப ஓ.எல். ரிசல்ட் வந்த பிறகு வடமராட்சியில உள்ள இன்னொரு பள்ளிக்கூடத்தில நடந்த சம்பவம் இது. அந்தப்பிள்ளைக்கு ஓ.எல். எக்ஸாமில ஓரளவுக்கு நல்ல ரிசல்ட். பள்ளிக்கூடமே அந்தப்பிள்ளை அப்பிடி ரிசல்ட் எடுக்குமெண்டு எதிர்பாக்கேலை. ஒட்டுமொத்தப் பள்ளிக்கூடமும் அந்தப்பிள் ளைக்கு ஒரே பாராட்டுமழை. 'வகுப்பில என்னதான் குறைவா மார்க்ஸ் எடுத்தலும் ஒரு ஓர்மம் வைச்சு படிச்சால் எக்ஸாமில சாதிக்கமுடியும் எண்டதுக்கு எடுத்துக்காட்டு' எண்டெல்லாம் மற்றப் பிள்ளையளுக்கு முன்மாதிரியாச் சொல்லவும் தொடங்கிட்டினம். எல்லாம் அந்தப்பிள்ளை 'ஸ்கூல் மாறப்போறன்' எண்டு கேக்கும் வரைக்கும்தான். 'அப்பிடியெல்லாம் ஸ்கூல் மாற ஏலாது. உம்மட பெற்றாரை வரச்சொல்லும்'எண்டு கோபமா பள்ளிக்கூடக்காரர் சொல்லி இருக்கினம். பெற்றாரும் பள்ளிக்கூடம் மாத்துறதில உறுதியா நிண்டிருக்கினம். அப்ப பள்ளிக்கூடக்காரர் ஒரு குண்டைத்தூக்கிப் போட்டிருக்கினம்.

'இவா இப்பிடி ரிசல்ட் எடுத்ததில எங்களுக்கு சந்தேகம் இருக்கு. ஆரையோ பத்து எழுதித்தான் பாஸ் பண்ணி இருக்கிறா. அதால எல்லாப் பாடத்துக்கும் அவாக்கு நாங்கள் இஞ்ச எக்ஸாம் வைக்கப்போறம்' எண்டு உலகமகா உருட்டொண்டை உருட்டி இருக்கினம். பிறகு அந்தப்பிள்ளைய ஒருமாதிரி பள்ளிக்கூடம் மாத்தியாச்சாம். ஆனாலும் 'பாத்து எழுதினவா' எண்ட கெட்டபேர் அந்தப்பிள்ளைக்கு வந்திட்டாம். இதுதானோ பள்ளிக்கூடங்கள் பிள்ளையளுக்குச் செய்யிற கைமாறு? உப்பிடியான ஆக்களுக்கு எடுக்கவேணும் விளக்குமாறு.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாண வலய மாணவ நாடாளுமன்ற (தரம்-5 தொடக்கம் 13 வரையான) மாணவர்களின் ஒளிவிழா நிகழ்வு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப11.30 தொடக்கம் 2.30 மணிவரை நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிகளைச் செய்ய விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக அறியத்தருமாறு பிரதிச் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (ரி)



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்ததின நிகழ்வு இந்தியத் துணைத்தூதரகத்தின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் உட்பட யாழ். இந்தியத் தூதரக அதிகாரிகள் நிகழ்வில் பங்கேற்றனர். (ச-20)





## டெங்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்குத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் யப்னா யாழ் ஒரியன்ற் லயன்ஸ் கழகமும், நல்லூர் கிங்டொம் லயன்ஸ் கழகமும் இணைந்து பாடசாலை மாணவர்களிடையே டெங்கு விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயம் என்பவற்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பங்கேற்புடன் டெங்கு விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எஸ்.என்.பிறேம்குமார் மற்றும் சிவானுஜன் ஆகியோர் மாணவர்களுக்கான டெங்குக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை வழங்கினர்.

பன்னாட்டு லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றரால் கடந்த4 ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை டெங்கு விழிப்புணர்வு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்த விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (எ-இ)



## முதியோர் சங்கங்களுக்கு தளபாடங்கள் கையளிப்பு

சாவகச்சேரி டிசெ. 13

கிராமிய முதியோர் சங்கங்களை வலுவூட்டுதல் திட்டம் மந்துவில் மேற்கு ஜே/346 மற்றும் மந்துவில் வடக்கு ஜே/347 ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களுக்கு அலுவலக மேசை மற்றும் கதிரைகள் வழங்கும் நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி தமிழினி சதீஷ், கணக்காளர் இ.ரமணன், நிர்வாக கிராமஅலுவலர் த.அருந்தமிழ்செல்வன் மற்றும் சமூகசேவை உத்தியோகத்தர் முகுந்தன் விஜயகுமாரி ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-9)



## கூட்டுறவுதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

பண்டத்தரிப்பு பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய 101 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றார்.

இதன்போது கூட்டுறவுப் பணியாளர்கள், அங்கத்தவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் புலமைப் பரிசிலில் சித்தியடைந்த அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-17)



## முல்லைத்தீவில் சதுரங்கச்சங்கம்

முல்லைத்தீவு, டிசெ. 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டை இளம் சந்ததியினர் மத்தியில் ஊக்கப்படுத்துவதை தொலைநோக்காகக் கொண்டு முல்லைத்தீவு மாவட்ட சதுரங்கச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது முல்லைத்தீவு மாவட்ட சதுரங்கச் சங்கத்துக்குத் தலைவராக சட்டத்தரணி எஸ்.தனஞ்செயன் உள்ளடங்கலாக 15 பேர் அடங்கிய நிர்வாகக்குழு தெரிவுசெய்யப்பட்டது. (ச-27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வீண்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனவருத்தங்கள் நீங்கும். உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். கடன் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**கடகம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். நண்பர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்து இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**தனுசு:** சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வியாபாரிகளால் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் செயற்படுவீர்கள். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** நீங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சி சாதகமாக முடிவடைய எதிர்பார்த்த ஆதாயமும் கூடுதலாகக் கிடைக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிகழ்காலத்துக்கு நீதி இல்லையா?

108 ஆண்டுகளுக்கு முன்னர் பாதுகாப்புப் படைப்பிரிவு அதிகாரியான எட்வேர்ட் ஹென்றி பெட்ரிஸ் கொல்லப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கின்றது. 1915ஆம் ஆண்டு சிங்கள-முஸ்லிம் கலவரத்தின்போது பெட்ரிஸுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது நாட்டை ஆட்சி செய்த மூத்த அதிகாரிகளின் திட்டமிட்டபடி, அவர் வலிந்து கொல்லப்பட்டார் என்று கூறப்படும் நிலையில், 108 ஆண்டுகளின் பின்னர் விசாரணை நடத்துவதற்கு மூவரைக் கொண்ட குழுவை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.


நூறாண்டுகள் கடந்தாலும்கூட, நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முனைப்பு பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால், அவரது ஆட்சியின்கீழ் நாட்டு மக்களுக்கு -குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு எதிரான அநீதிகளை தடுக்காது கள்ள மௌனம் காக்கும் ரணில் விக்கிரமசிங்க, 108 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஒரு மரணத்துக்கு நீதியை நிலைநாட்ட முயல்வதை என்னவென்று சொல்வது?

நிறைவேற்று ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில், நீதிபதி ஒருவர் நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைமைதான் இருக்கின்றது. நீதிபதிக்கே அவ்வாறான நிலைமை என்றால், நாட்டின் சாதாரண குடிமகனின் நிலைமை சொல்லித் தெரியவேண்டியதில்லை. அதிலும் சிறுபான்மை மக்களின் நிலைமையோ பரிதாபம். காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடியும், இராணுவத்தால் பலவந்தமாகக் கைப்பற்றப்பட்டிருக்கும் தங்கள் நிலங்களை விடுவிக்கக் கோரியும் பாதிக்கப்பட்ட மக்கள் பல ஆண்டுகளாக வீதிகளில் போராடி வருகின்றனர். கடந்த காலங்களில் அரசாங்கங்களில் முக்கியமான பதவிகளில் இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று எப்போதும் நினைத்ததில்லை.

ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியுடன் செயற்பட்டிருந்தால் நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வை 'நீதியை வழங்கியிருக்க முடியும். ஆனால், தனது அரசியல் ஆதாயம், அதிகார மோகத்தால் அவர் அந்தச் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டார். ஆனால், சர்வதேசத்துக்கும், உள்நாட்டிலும் தன்னை நல்லிணக்கவாதி என்றும் நாட்டின் மீது அளவு கடந்த அக்கறை கொண்டவராகவும் காட்டிக் கொண்டு பதவிக் கதிரையை இறுகக்கட்டிப்பிடித்திருக்கின்றார், தற்போதும் அதையே செய்துகொண்டிருக்கின்றார். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற உண்மையான நோக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்குமானால், தன் கண் முன்பாக நீதிக்காக அலையும் மனிதர்களுக்கு அவர் முதலில் நீதி கிடைக்க வழியேற்படுத்த வேண்டும். நாட்டின் அதியுயர் பதவியில் -நிறைவேற்று அதிகாரத்துடன் இருக்கும் அவருக்கு அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், ரணில் விக்கிரமசிங்க அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. தற்போதும் அவர் அதிகாரக்கதிரைக்கான ஓட்டத்திலேயே இருக்கின்றார். இப்போது அவர் எடுத்திருக்கும் முயற்சியும் அந்த ஓட்டத்தின் ஒரு பகுதியே.

**இலங்கை முன்னேற வேண்டுமானால் 'பொருளாதாரம் மீளெழவேண்டுமானால்' நாட்டின் மீது பெரும் அக்கறை கொண்டு பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க அவசரமாகச் செய்யவேண்டிய செயல் இதுவல்ல. தனது ஆட்சியில் 'தற்காலத்தில் நிலவும் பிரச்சினைக்கான தீர்வை வழங்கி' நீதியை நிலைநாட்ட வேண்டும். அதைச் செய்யாது வாய்ப்பேச்சில் வெட்டி வீழ்த்துவதால் எதுவும் மாறிவிடாது என்பதுதான் நிதர்சனம்.**






# இந்திய மீனவர்களை விடுவிக்க அழுத்தம்!

கொழும்பு, டிசெ.13

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இந்தியக் கடற்றொழிலாளர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட மீனவர்களில் 8 பேர் காரைக்காலைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மன்னிப்பு கோரிய பொலிஸார்

கொழும்பு, டிசெ.13

2022ஆம் ஆண்டு காலி கோட்டைப் பகுதியில் நடந்த போராட்டத்தில் சட்டத்தரணிகள் சிலருக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பாக பொலிஸாரும், இராணுவத்தினரும் உயர் நீதிமன்றில் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

11 சட்டத்தரணிகள் இணைந்து முன்வைத்த மனு நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே மன்னிப்புக் கோரப்பட்டுள்ளது. (எ-இ)

# இறைச்சி, முட்டையில் நாடு தன்னிறைவு



கொழும்பு, டிசெ. 13

அடுத்த வருடம் முதல் முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. அது தொடர்பில் நாம் விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரித்துள்ளோம் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் முட்டை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது அடுத்த வருடம் முதல் முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. தற்போது கோழி இறைச்சியின் விலை குறைவடைந்துள்ளது. நாம் மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். அடுத்த வருடம் முதல் அதை இன்னும் பல்வேறு நாடுகளுக்கு விரிவுபடுத்தத் திட்டமிட்டு வருகின்றோம் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# மீண்டும் மின்தடை

கொழும்பு, டிசெ.13

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் நாட்டில் மீண்டும் மின்தடை ஏற்படும் சாத்தியம் உள்ளது என்று இலங்கை மின்சாரசபையின் தொழில்நுட்பப் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை நாடு முழுவதும் திடீர் மின்தடை ஏற்பட்டது. மின்னல் தாக்கம் காரணமாகவே மின்தடை ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

இந்த மின் விநியோகப் பாதையில் உடனடியாகச் சீரமைப்பை மேற்கொள்வது உள்ளிட்ட சில பரிந்துரைகளைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

இந்தப் பரிந்துரைகள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாது இருப்பது ஆபத்தானது என்று இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்பப் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## நாளை

14.12.2023

**வியாழக்கிழமை**

**கார்த்திகை - 28**

சுபநேரம் : 07.51 - 09.21

ராகுகாலம் : 01.51 - 03.21

## நாளொரு நல்வார்த்தை

**நடந்தவற்றை ஏற்றுக்கொள்வதே துரதிர்ஷ்டத்தின் விளைவுகளை எதிர்கொள்வதற்கான முதல்படி.**

**– வில்லியம் ஜேம்ஸ் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தின்பால் இளையோர் ஈர்ப்பு!

## அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 13

இளைஞர் சமூகத்தை விவசாயத்தின் பக்கம் ஈர்த்து விவசாய நடவடிக்கைகளை நவீனமயப்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று கமத் தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச் சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப் பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எமக்கு வருடாந்தம் 25,40,000 மெற் றிக்தொன் அரிசி அவசியமாகும். இம் முறை 27,50,000 மெற்றிக் தொன் விளைச்சல் கிடைத்துள்ளது. ஆனாலும் அரிசி இறக்குமதி செய்யவேண்டிய நிலை உள்ளது.

இளைஞர்கள் விவசாயத்தை விட்டுத் தூரமாகியுள்ளமை எமக்குள்ள பெரும் பிரச்சினையாகும். பெரும்பாலும் வய தானவர்களே விவசாய நடவடிக்கை களில் ஈடுபடுகின்றனர்.

இளைஞர்களை விவசாயத்தின் பக்கம் ஈர்க்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இதற்காக விவ சாய நவீனமயப்படுத்தல் பணிகள் மேலும் வலுப்படுத்தப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## பரிசளிப்பு

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் வரு டாந்தப் பரிசளிப்பு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைகாலை 9 மணிக்கு பாடசாலை யின் மண்டபத்தில் அதி பர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் பிர தம விருந்தினராகவும், கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், யாழ். வலய ஆசிரிய ஆலோ சகர் ந.சிறிமுருகதாஸ் காந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்க ளாகவும், பழைய மாணவி திருமதி இந் துஜா கஜீதரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ள னர். (ச-66)

# வீட்டுக்காவல் முறைமை அமைச்சரவை அனுமதி!

சந்தேகநபர்களைத் தடுப்புக் காவலில் வைப்பதற்குப் பதிலாக வீட்டுக்காவலில் வைத்திருப்பதற்கு அமைச் சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசல் காரணமாக குறித்த யோசனை முன்மொழி யப்பட்டது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோச னையையே அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ச-இ)

# சவேந்திர சில்வாவை வரவேற்ற இந்தியா!

கொழும்பு, டிசெ. 13



பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜென ரல் சவேந்திர சில்வா இந்தியப் பாதுகாப்பு பயிற்சிக்கல்லூரிப் பட்டமளிப்புவிழா வுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

இதில் உத்தரகண்டிலுள்ள பாது காப்புப் பயிற்சிக்கல்லூரியில் பட்டம் பெற்று வெளியேறிய இராணுவ வீரர்களுக்குச் சான்றிதழ்களை சவேந்திரசில்வா வழங்கி வைத்தார்.

சவேந்திர சில்வாவுக்கு இராணுவ அணிவகுப்பு மரி யாதையுடன் கூடிய மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது.

இதேவேளை பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின்போது போர்க்குற்றத்தில் ஈடுபட்ட தாகத் தெரிவித்து அவர் மீது பயணத்தடை விதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

# நத்தார் தினத்தின் பின்னர் இலங்கைக்குக் கனமழை

கொழும்பு, டிசெ.13

இலங்கையின் தெற்கு அந்தமான் கடல் பிராந்தியத் தில் காணப்படுகின்ற காற்றுச் சுழற்சி, மேற்கு நோக்கி இலங்கையின் தெற்குப் பகுதியினூடாக நகர்ந்து வரு வதனால் நேற்று முதல் நாட்டின் சில பகுதிகளுக்கு மழை கிடைக்கும் சாத்தியம் காணப்படுகின்றது என்று மூத்த வானிலை ஆய்வாளர் சூரியகுமார் தெரிவித் துள்ளார்.

இந்தக் காற்றுச் சுழற்சியானது எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கைக்குத் தெற்காக வந்து, குமரிக் கடல் வழியாக மாலைதீவு, இந்தியாவின் லட்சஷத்தீவுக்கு இடைப்பட்ட பகுதியின் ஊடாக அரபிக் கடல் பிராந்தி யத்துக்குச் செல்லும்.

அதேவேளை எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் மீண் டும் ஒரு காற்றுச் சுழற்சி இலங்கையை நெருங்கி, அது எதிர்வரும் 21, 22, 23ஆம் திகதியளவில் மன் னார்வளைகுடாஊடாக அரபிக்கடல்பிராந்தியத்தினுள் நகரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் மழை காணப்படும் என்று எதிர்வு கூறப்பட் டுள்ளது. எதிர்வரும் நத்தார் பண்டிகைக்கு அடுத்த நாள் அந்தமான் கடல் பிராந்தியத்தில் தெற்கு சுமத் திராத் தீவை ஒட்டி மேலும் ஒரு காற்றுச் சுழற்சி வங்கக் கடல் பிராந்தியத்தில் உருவாகும்.

அது படிப்படியாக வலுவடைந்து எதிர்வரும் 26, 27ஆம் திகதியளவில் இலங்கையை நெருங்கி, தமிழ் நாட்டை நோக்கிச் செல்லும். மேற்கூறப்பட்ட காலப் குதிகளில் இலங்கையில் மழை பெய்யும் சாத்தியம் காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

# பெரமுனவின் பரப்புரை 15ஆம் திகதி ஆரம்பம்!

கொழும்பு, டிசெ.13

தேசிய மட்டத்திலான தேர்தலை இலக்கு வைத்து சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் 'அரசியல் பிரசார நடவடிக்கை' நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படவுள் ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் 2ஆவது தேசிய சம்மேளனம் கட்சித் தலைவர் மஹிந்த ராஜ பக்ச தலைமையில் நாளைமறுதினம் கொழும்பு, சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

பங்காளிக்கட்சிகள் மற்றும் மொட்டுக் கட்சிக்கு ஆதர வான அமைப்புகளும் இதில் பங்கேற்கவுள்ளன.

2024 தேர்தல் வருடம் என அறிவிக்கப்பட்டுள்ள தால், தேர்தலை மையப்படுத்தி பிரசார நடவடிக்கை களை ஆரம்பித்து வைக்கும் கூட்டமாகவே இது அமையவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மொட்டுக் கட்சியின் தலைமைப்பதவியில் மாற்றம் வராது எனத் தெரியவருகின்றது. எனினும், அடுத்த தலைமைத்துவத்துக்கான சமிக்ஞைகள் மேற்படி கூட்டத்தில் வெளியிடப்படவுள்ளன. (எ-44)

# தேங்காய் எண்ணெய் உற்பத்தி முடக்கம்!

உள்நாட்டில் உள்ள ஆயிரத்து 500 தேங்காய் எண் ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என்று தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தியா ளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் கார ணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வருடாந்த தேங்காய் எண்ணெய்க்கான கேள்வி, 2 இலட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் னாகும். ஒரு கோடியே 77 இலட்சம் கிலோகிராம் அளவில் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப் படுகின்றது.

இதற்காக 7 ஆயிரத்து 891 மில்லியன் ரூபா செலவி டப்படுகிறது. இதனால் எமது தொழிற்றுறை பெருமள வில் பாதிப்படைந்துள்ளது என அந்தச் சங்கம் தெரி வித்துள்ளது. (எ-இ)

# மூலஸ்தான விக்கிரக பிரதிஷ்டாபிஷேகம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

உரும்பிராய் காளி அம்பாள் ஆலயத்தில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூலஸ்தான விக்கிரக அம் பாளுக்கு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் முற்பகல் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் அந்தரீத பிரதிஷ்டாபிஷேகம் நடை பெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் நாளை வியாழக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் என்று ஆலய பரி பாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

# கங்காராமவுக்கும் படையெடுக்கும் சுற்றுலாவிகள்

கொழும்பு, டிசெ.13

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மட்டும் 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணி கள் இலங்கைக்கு வந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் அதிகளவிலான சுற்றுலாப்பயணி கள் கொழும்பிலுள்ள கங்காராம விகாரைக் குச் சென்றுள்ளனர்.

குளிர்காலத்தை முன்னிட்டு டிசெம்பர் மாதத் தில் அதிகளவிலான சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகின்றனர். டிசெம்பர் மாதத் தில் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 135 சுற்று லாப் பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்படு கின்றது. (எ-இ)

# அநுராதபுரத்தில் எச்.ஐ.வி. அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.13

அநுராதபுரம் மாவட்டத்தில் எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அதி கரித்துள்ளனர் என்று மாவட்ட சுகாதார அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். இந்த வீதம் குறித்து மாவட்டச் சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் 19 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் இனங்கா ணப்பட்டுள்ளனர் என்று அநுராதபுரம் மாவட்டச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிமல் ஆரியரத்ன தெரிவித் துள்ளார்.

அவர்களில் பெரும்பாலானோர் ஆண்கள் என்றும், இந்த அதிகரிப்புக்கு ஓரினச்சேர்க்கை உறவுகள் காரணம் என்று நம்பப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழியால் கைகலப்பு

யாழ்., டிசெ. 13
வளர்ப்புக் கோழியால் ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கைகலப்பில் முடிந்துள்ளது.
இந்தச் சம்பவம் கோப்பாய் வடக்கு பூதர்மடத்தடியில் நடந்துள்ளது. வீட்டுக்காரர் ஒருவரின் கோழி அடுத்த வீட்டுக்குள் சென்றபோது அந்த வீட்டின் நாய் கோழியைக் கடித்துள்ளது. அதனால் இருவீட்டாருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கைகலப்பாக மாறியதில் ஒருவர் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-17)



# இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றுக!

### நாடாளுமன்றில் வலியுறுத்து

**கொழும்பு, டிசெ.13**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது நாடாளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.
குருக்கள் மட இராணுவ முகாம் பற்றி நாம் மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடியதில், முகாமின் ஒரு பகுதி விடுவிக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார்கள். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் அதைத் துரிதப்படுத்தித் தரவேண்டும்.
அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் காயன்கேணி பிரதேசத்தில் புதிதாக ஓர் காணியை இராணுவம் தன்வசப்படுத்தும் திட்டம் உள்ளது என்று அறிகின்றோம். மட்டக்களப்பில் இவ்வாறாகப் பல காணிகள் காணப்படுகின்றன. அவற்றை விடுவிக்க ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகள் முன்வைத்துள்ளேன் - என்றார். (எ-இ)

## சுன்னாகம் நூலக பரிசளிப்பு நாளை

யாழ்., டிசெ. 13
வலிகாமம் தெற்குப்பிரதேசசபைக் குட்பட்ட சுன்னாகம் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசாம்பவன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் உடுவில் பிரதேச சமூக மருத்துவர் திருமதி ஜெ. ரத்னலஜி பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை நூலகர் மு. சின்னராஜா, யாழ். உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் திருமதி ம.செல்வமாலினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)



## பவளவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 13
சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பவளவிழா நேற்று முன்தினம் புதிதாக அமைக்கப்பட்ட கலைமகள் கலையரங்கில் சிறப்புற இடம்பெற்றது.
நிலையத்தின் தலைவர் வடிவேலு கோகுலநேசன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வில் சனசமூக நிலையத்தில் 1948 ஆம் ஆண்டு முதல் சேவையாற்றி மறைந்த நிர்வாக உறுப்பினர்களின் திருவருவப் படங்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து பாரம்பரிய கலைநிகழ்வுகள், இன்னிசை கானம் என்பன சிறப்புற்றன.
நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும் பேராசிரியருமான எஸ்.ரகுராம் ஆகியோர் பங்கேற்றனர். (ச-125)

## வெங்காயம் விலையுயர்வு

*யாழ்., டிசெ. 13*
*யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் பெரிய, சிறிய வெங்காயங்களின் விலை திடீரென உயர்வடைந்துள்ளது என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.*
*அதன்படி சின்ன வெங்காயம் கிலோ 430 ரூபாவாகவும் பெரிய வெங்காயம் 380 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன.*
*அதேவேளை பச்சைமிளகாயின் விலையும் உயர்வடைந்து கிலோ ஆயிரத்து 300 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-17)*

## குழு மோதல் ஒருவர் சாவு!

கொழும்பு, டிசெ. 13
இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார், ஒருவர் காயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு குருநாகல், மாவத்தகம பிரதேசத்தில் நடந்துள்ளது.
சம்பவம் தொடர்பில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த பகுதியின் பாதுகாப்புக்காகப் பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## நீரில் மூழ்கி ஒருவர் சாவு

பெந்தோட்டைக் கடலில் நீராடச் சென்ற இரண்டு இளைஞர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
உயிரிழந்தவர் பேருவளைப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
மற்றைய இளைஞர் களுத்துறை நாகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சையளிக்கப்படுகிறது. (ச-இ)

## ஆரியகுளத்தடியில் மழையால் குழி

யாழ்ப்பாணம், டிசெ. 13
தற்போது பெய்து வரும் மழைகாரணமாக யாழ்.நகர் ஆரியகுளம் சந்தியில் குழியொன்று ஏற்பட்டுள்ளது. இதனால் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.
இந்தக் குழியை உடனடியாகச் சீர்செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-17)



## வலிகாமம் வடக்கு பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 13
வலிகாமம் வடக்குப்பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.
நிகழ்வுக்கு பிரதேச கலைவடிவ ஆற்றுகைகளின் பண்பாட்டு ஊர்வலப் பவனியுடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர்.
தொடர்ந்து இந்த ஆண்டுக்கான 'கலைச்சுடர்' விருதும், கலாசாரத் திணைக்களத்தின் பிரதேசமட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெற்றன. தொடர்ந்து கலை ஆற்றுகைகள் சிறப்பாக நடைபெற்றன. (ச)

## போதைப்பொருள் கடத்தல் சூத்திரதாரிப் பெண் கைது

கொழும்பு, டிசெ. 13
கொலன்னாவப் பிரதேசத்தை மையப்படுத்தி போதைப்பொருள் கடத்தலுக்குத் தலைமை தாங்கும் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் அவர் கைதுசெய்யப்பட்டார்.
அவரிடமிருந்து 7 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் இலத்திரனியல் தராசு ஒன்றும் மீட்கப்பட்டன.
சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கவிஞர் ஜஸீம் விடுதலை

கொழும்பு, டிசெ.13
தன்னிடம் கற்ற மாணவர்களுக்கு தீவிரவாதத்தை போதித்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளம் கவிஞர் அஹ்னாப் ஜஸீமை அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்து புத்தளம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
சட்டமா அதிபர் முன்வைத்த சாட்சியங்கள் ஊடாக அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கமுடியாது போயிருப்பதாகக் கூறி புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அபர்னா சுவந்துருகொட இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். (எ-இ)

## பொறுப்பற்ற விதத்தில் எதிர்க்கட்சிகள்

அரச தரப்பு குற்றச்சாட்டு



**கொழும்பு, டிசெ.13**
**நாடாளுமன்றத்தை நடத்த ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபா செலவிடப்படும் நிலையில் எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே ஞாயிற்றுக்கிழமை விவாதத்தை " கூட்ட நடப்பெண்" கோரி இடைநிறுத்தினர் என்று அரச தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தை நடத்த ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா செலவிடப்படுகிறது. இந்த விவாதத்தால் நாட்டுக்கு நன்மை கிடைக்கும் என்பதால் விவாதத்தை நடத்த விரும்பினோம்.
நாடாளுமன்ற ஊழியர்கள் தொடர்ந்து வேலை செய்கிறார்கள். இது எளிதானது அல்ல. ஆனால் எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே இந்த விவாதத்தை முறியடித்தன. எதிர்க்கட்சியினர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டனர் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-இ)

## திண்மக்கழிவு முகாமைத்துவம் 5,550 கோடி ஒதுக்கீடு!

கொழும்பு, டிசெ.13
கொழும்பு மாநகரம் தொடர்பான திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் அரச மற்றும் தனியார் பங்களிப்புடன் அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
இந்தத் திட்டத்தின் நிலையான செயற்பாட்டுக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை தற்போது அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்காக வரவு- செலவுத் திட்டத்தில் 5 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
இந்தத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ-இ)

## இணையவழி விசா அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ.13
இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கான விசா விண்ணப்பங்களை இணையவழி முறையின் ஊடாக சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. (எ-இ)

## விமலுக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு உத்தரவு

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ மற்றும் அவர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய பிணையாளர்கள் இன்று நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அழைப்பாணை அனுப்ப கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.
விமல் வீரவன்ஸவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பான விசாரணைகள் நேற்று நடைபெற்றிருந்த நிலையில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ, நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்தபோது, தமது கட்சிக்காரர் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று நேற்றுக் காலை 9 மணியளவில் தமக்கு அறிவிக்கப்பட்டது என்று தெரிவித்திருந்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

"தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு." - வள்ளுவர்





# பெருமைக்குரியோரை கைவிடுதல் தகுமா?

பழனித்துரை தர்மகுமாரன்.
தலைவர்
உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கம்

**விளையாட்டுத்துறையில் சாதிக்கும் மாணவர்களின் கல்வி கானல்நீராக மாறவிடக் கூடாது. ஏனெனில் இலங்கையைப் பொறுத்தவரையில் கல்வித் தகைமை இல்லாது எந்தவித உயர்கல்வியையோ தொழில் வாய்ப்பையோ பெற்றுக்கொள்ளமுடியாது என்பதே நிதர்சனம். இதனைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளில் தம்மை அர்ப்பணித்து பாடசாலையின் நன்மதிப்பு, சுயகௌவரம், அடையாளத்தை பாதுகாக்கும் மாணவர்களின் கல்வியை உயர்த்தவேண்டும். அதாவது இழந்த வகுப்பறைக்கல்வியை மேலதிக நேரத்தில் ஈடுசெய்ய வேண்டும். கல்வித்திணைக்களத்தால் கோட்டம், வலயம், மாகாணம், தேசியப் போட்டிகளுடன் வேறு போட்டிகளும் தற்போது நடத்தப்படுகின்றன.**

**இந்தப் போட்டிளுக்கான தயார்ப்படுத்தலானது பயிற்சிக்காலம், போட்டிக்காலம் என இரண்டு வகையாகக் காணப்படுகின்றது.**

**பயிற்சியின்போது இழக்கப்படும் கல்வி மீள வழங்கப்படுகின்றதா? என்ற கேள்வி பெற்றோர் மத்தியில் எழுந்துள்ளது. இந்தக் கற்றல் வீழ்ச்சியால் பல மாணவர்கள் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைய முடியாத நிலையில் உயர் தரத்தை தவற விடுகின்றனர். அதையும் தாண்டி கடும்முயற்சியின் பயனாகவும் கடும் உழைப்பிலும் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர்தரத்துக்குச் செல்லும் மாணவர்கள் (விளையாட்டில் ஈடுபடும் மாணவர்கள்) பெரும் சவாலுக்கு முகம் கொடுக்கின்றனர்.**

உயர்தரத்தில் கணிதப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவைத் தெரிந்தெடுக்கும் மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடமுடியாத நிலை உருவாகியுள்ளது. அதற்கு, அதன் பாடப்பரப்பும் கற்றலை மேற்கொள்ளும் மாணவர்கள் மீது திணிக்கப்படும் பிரமாண்டமான மாயையும் பிரதான காரணிகளாக அமைகின்றன. இந்த ஆசிரியரிடம் கற்காவிட்டால் சித்தியடைய முடியாது. அவர்தான் பரீட்சைக்கான கேள்விகளை தருவார் என்ற தோற்றப்பாடு மாணவர்களை ஓரிடத்தில் குவிய வைக்கின்றது. இது விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு சவாலாகத் திகழ்கின்றது. இதனால் ஆளுமைமிக்க மாணவர்களின் உருவாக்கம் தடைப்படுவதுடன் இலங்கையின் கல்விக்கொள்கை மாற்றத்துக்குள் கொண்டுவரப்படுகின்றது.

## தனியார் மயமாகும் பாடசாலைக் கல்வி

பாடசாலைக் கல்வியை விட தனியார் கல்வி நிலையங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் பெற்றோரும், மாணவர்களும் இன்று தாராளமாகவே உருவாகிவிட்டனர். இதனைக் கருத்தில் கொள்ளாத கல்வித்திணைக்களம் இதே போக்கில் போகுமாக இருந்தால் ஆற்றல்மிக்க மாணவர்களை உருவாக்க முடியாது. பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகளை வழங்கவேண்டும். அதற்கு பாடசாலை நிர்வாகம் ஏதாவது சலுகைகளை வழங்க வேண்டும்.

இன்றைய பொருளாதாரப் பிரச்சினையில் ஆசிரியர்கள் விதிவிலக்கானவர்கள் அல்லர். அரச தொழிலில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட தொழில் ஆசிரிய தொழிலாகும் என்பதனை எல்லோரும் உணர்ந்து கொள்வதுடன் பழைய மாணவர் சங்கங்கள் விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டும் இல்லையேல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நிதிவழங்க ஏற்பாடுசெய்யவேண்டும்.

ஏனெனனில் விளையாட்டில் ஈடுபட்டு சான்றிதழைப் பெறும் மாணவர்களுக்கு கல்வித்தகைமைஇருக்கும் பட்சத்தில் இலங்கையில் உள்ள யாழ். பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம் என்பனவற்றில் விளையாட்டு விஞ்ஞானப் பட்டத்தையோ, விளையாட்டு முகாமைத்துவ பட்டத்தையோ பெறமுடியும். அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு கல்வியல் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்று உடற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கெல்லாம் க.பொ.த. சாதாரண தரத்தில், உயர்தரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

## ஓரவஞ்சனை வேண்டாம்

இன்றைய நிலைப்பாடு எவ்வாறு காணப்படுகின்றதெனில் பாடசாலையில் தம்மை முழுமையாக பயிற்சியில் ஈடுபடுத்தி வெற்றிகளைக் குவித்து பாடசாலைக்கும், சமூகத்துக்கும் உயர் கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுத்த மாணவர்கள் க.பொ.த.சாதாரணம், உயர்தரத்தில் சித்தியடையாமல் இலவுகாத்த கிளிபோல் இருக்க, அணியில் மேலதிக வீரர்களாக இருப்பவர்கள், விலாங்கு மீன் பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டுவது போல் விளையாட்டு மைதானத்திலும் வகுப்பறையிலும் தங்கள் தலைகளைக் காட்டி பிரயோசனம் பெறுகிறார்கள்.

அவர்கள் நன்மை அடைவது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால், விளையாட்டில் தன் உடல், உயிர், காலம், நேரத்தைச் செலவு செய்தவர்கள் கையறு நிலையில் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர். அதாவது குருதியை வியர்வையாக்கி, உடலை உருக்கி இரும்பாக மாற்றி, அன்றாட கருமங்களை இழந்து உறவு நிலைமறந்து தம்மை விளையாட்டுக்கே ஆகுதியாக்கியவர்கள் வீதியில் நிற்பது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும். அவர்களின் விளையாட்டுத்திறனால் பாடசாலை, கல்விவலயம், மாவட்டம், மாகாணம் பெருமையடைகின்றது. ஆனால், கல்வியைப் பூர்த்தியாக்கியவன் எதிர்காலத்தில் விடிவெள்ளியாகிறான். கல்வியை இழந்தவன் கடப்பாறையாகின்றான்.

விளையாட்டில் ஈடுபடுபவர்களின் கல்வித்தரம் பாதிப்படையாமல் அதிகரிக்குமாக இருந்தால் பெற்றோர் விளையாட்டுக்கு ஆதரவு நல்குவார்கள், மாணவர்களும் தயக்கமின்றி விளையாட்டுக்கு வருவார்கள். வடமாகாணம் விளையாட்டில் பிரகாசிக்கும். இல்லையேல் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக பின்னோக்கிக் காணப்படும். இதனைக் கருத்திற்கொண்டு விளையாட்டில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் மாணவிகளில் நலன்காக்க நாம் பொதுப்பொறிமுறையொன்றை விரைந்து ஏற்படுத்தவேண்டும். அதுதான் இன்று அவசரமும் அவசியமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று மின் கட்டமைப்பால் பொருளாதாரம் வலுப்பெறும்

மருத்துவர் சி.யமுனாநந்தா



ஒரு நாட்டின் உற்பத்தி அதன் செலவீனங்களைவிட அதிகமாக இருக்கும் பட்சத்திலேயே அந்த நாடு வளர்ச்சி அடையும். மாறாக உற்பத்திகள் இன்றி அபரிமித செலவுகளைச் செய்தால் அந்நாடு வீழ்ச்சியுறும். இவ்வாறான நிலைமையின்போது நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்களை இறக்குமதி செய்தல் கடினமாகும். இதனை நாம் கடந்த வருட அனுபவத்தில் கண்ணுற்றோம். எரிபொருள் இறக்குமதிப் பாதிப்பு நாட்டின் சகல மக்களின் நுகர்வினையும் வாழ்க்கையையும் பாதித்தது. மேலும் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குரிய ஆற்றலும் இல்லாத நிலை ஏற்பட்டது. இதிலிருந்து மீள்வதற்கு, வரி அறவிடல் வேலைகளைக் குறைத்தல் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தல் என்பன தற்காலிக தீர்வைத்தரினும் நீண்டகாலப் பொருளாதார உறுதிப்பாடு குறித்து நாம் இங்கு சிந்திக்கவேண்டும். சூழல் நேயம்மிக்க மின்சாரவூர்திகளின் பாவனையும், பற்பல தொழில் முயற்சிகளுக்கு மக்களின் அன்றாட மின்சாரப்பாவனைக்கும் உரிய சக்தியினை நாம் மலிவாகவும் இலகுவாகவும் சூழல் நேயம்மிக்கதாகவும் அதிக முதலீடு இல்லாததாகவும் தெரிவு செய்தல் அவசியம். இதில் முதன்மையானது தென்னிந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற அணுமின்சக்தியினை இரமேஸ்வரம் தலைமன்னார் வழியாக இலங்கைக்கு எடுப்பதற்கு இராஜதந்திரரீதியில் இந்திய அரசுடன் இலங்கை அரசு முயற்சி எடுத்தல் அவசியம். இது மிதக்கும் மின் வலையமைப்புகள் மூலம் சாத்தியமாகலாம். இதனால் இலங்கையின் வடக்கு-கிழக்கு மலையகத் தமிழர்களின் வாழ்க்கைத்தரமும் இலங்கையின் ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கைத்தரமும் உயரும். அடுத்து தகவல் தெழில்நுட்பத்துக்கான செய்மதி உதவிகளை இந்தியாவில் இருந்து குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறிய இரு பொருளாதாரத்தீர்வுகள் இலங்கையினை கடந்த வருடத்தைப் போல் மீண்டும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு இட்டுச் செல்வதனைத் தவிர்க்கும். ஈழத்தமிழர்களும் தமிழ் அரசியல்வாதிகளும் புதிய உலக ஒழுங்கில் பொருளாதார யுத்தம் தமிழ் மக்களைக் காவு கொள்ளாது இருப்பதற்கு மிகவும் காத்திரமான உபயமாக இதனைக் கைக்கொள்ளல் அவசியமானது.

# மனதை மயக்கும் ஹைக்கூ கவிதை

இரா.நிஷாந்தன்
ஆசிரியர்

கவிதை என்பது மனித உணர்ச்சிகளுக்கு உயிர் கொடுப்பது. அத்தகு கவிதை வடிவங்களில் தற்காலத்தில் எல்லோராலும் விரும்பப்படுகின்ற கவிதை வடிவமாக விளங்குவது ஹைக்கூ. ஜப்பானிய நாட்டின் புகழ்பெற்ற கவிதை வடிவம் இதுவாகும். இது ஐக்கூ, துளிப்பா, அணில்வரிக் கவிதை, வாமனக் கவிதை எனும் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. குறைவான சொற்களைக் கொண்டு ஆழமான கருத்தை வெளிப்படுத்துவதனால் படிப்பவர் மனதைக் கவர்ந்து மயக்கும் சக்தி இந்த ஹைக்கூ கவிதைக்கு உண்டு. கடுகினைப் போல சிறிய அளவில் இருந்தாலும் கருத்துகளைச் செறிவுடன் விளக்கக்கூடியதாக இக்கவிதை விளங்குகின்றது. நேரடியாகவும், மறைமுகமாகவும் கருத்தை வெளிப்படுத்துவதனால் இதனைப் படிக்கும்போது மனதில் ஆனந்தம் பெருகும். எனவே தான் ஹைக்கூ என்பது 'கவிதை உலகின் புதிய மழலை' என்கிறார் மேலாண்மை பொன்னுச்சாமி.

### ஹைக்கூ கவிதையின் அமைப்பு

ஹைக்கூ கவிதையின் அமைப்பை நோக்கும்போது மூன்று வரிகளைக் கொண்ட சிறிய அமைப்பில் காணப்படும். முதலாவது வரியில் 5 அசைகளும், இரண்டாம் வரியில் 7 அசைகளும், மூன்றாம் வரியில் 5 அசைகளும் கொண்டதாக விளங்கும். ஆரம்பத்தில் இந்த 5,7,5 எனும் அளவு வரையறையை கடைப்பிடித்திருந்தாலும் தற்காலத்தில் அதிகளவில் இந்த அளவு முறையை மீறும் வகையில் ஹைக்கூ கவிதைகள் படைக்கப்படுகின்றன. ஆனாலும் மரபுக்கவிதை போன்று உறுதியான நெறிமுறைகள் இல்லாமையாலும், சிறிய எண்ணிக்கையிலான சொற்களைப் பயன்படுத்தி எழுதப்படுவதனாலும் இக்காலத்தில் மூன்று வரி என்கின்ற அடிப்படை வரையறையினைப் பின்பற்றி அதிகமானோர் ஹைக்கூ கவிதைகளை எழுதுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

### ஹைக்கூ கவிதையின் தனித்துவம்

பொதுவாக ஹைக்கூ கவிதையில் சொற்களின் பிணைப்பு மிக முக்கியமானது. மூன்று வரிகளில் அமையும் இக்கவிதையில் முதல் வரி சாதாரணமாக அமையும். இரண்டாம் வரியில் ஒரு வெட்டு, ஒரு தயக்கம் காணப்படும். ஆனால் மூன்றாவது வரி உயிரோட்டமானது. அதில்தான் கருத்துத் திருப்பம், ஆச்சரியம் என்பன நிகழும். எனவே தான் ஹைக்கூவை படிக்கும்போது ஒவ்வொரு வரியையும் மெதுவாக பொறுமையோடு படிக்கவேண்டும். அப்போது தான் ஹைக்கூவின் உயிர்ப்பை இனங்காணமுடியும்.

இங்கே ஹைக்கூ கவிதை ஒன்றைப் படிப்போம்.

**உதிர்ந்து வீழ்ந்த மலர்**
**கிளைக்குத் திரும்புகிறது**
**ஓ வண்ணத்துப்பூச்சி**

செர்ரி பூக்கள் மரத்தில் இருந்து உதிர்ந்து கீழே விழுகின்றன. அப்போது திடீரென்று ஒரு பூ தரையிலிருந்து கிளையை நோக்கி மேலெழுகின்றது. அடடா, பூ பறக்கின்றதா? என்று ஆச்சரியம் எழுகின்றது. ஆனால் அடுத்த வரியில் உண்மை புலப்படுகின்றது. கிளையை நோக்கிப் பறந்து வந்தது அழகிய வண்ணத்துப்பூச்சி. செர்ரிப் பூக்கள் அழகின் சின்னம். இயற்கையின் அழகிய குறியீடு. அது உதிர்ந்து கீழே விழுந்து விடுகின்றது. ஆனால் அதன் இழப்பை ஒரு வண்ணத்துப்பூச்சி வந்து ஈடுசெய்து விடுகின்றது. அப்போது வண்ணத்துப்பூச்சி பார்வைக்கு பூவாகக் காட்சியளிக்கின்றது. இதுவே ஹைக்கூவின் சிறப்பு. ஆக, ஹைக்கூ கவிதையைப் பல கோணங்களில் பொருள் காண்பது வாசகனின் வேலையாகும்.

நாம் காணும் காட்சிகளுக்கு உயிர் கொடுப்பது ஹைக்கூ. இந்தக் ஹைக்கூவைப் படியுங்கள்.

**வெள்ளைக் கொக்கு**
**மெல்ல நகர்ந்து செல்கிறது**
**மேகக்கூட்டம்**

இங்கு முதல் இரண்டு வரிகளைப் படிக்கும்போது வெள்ளைக் கொக்கு ஒன்று மெல்ல நகர்ந்து செல்கிறது என்றே அதன் கருத்து எமக்குப் புலப்படும். ஆனால் மூன்றாவது வரியைப் படித்ததும் உண்மை யாதென புலனாகின்றது. மேகக்கூட்டம் வெண்மை நிறம் உடையவை. ஆக கொக்கினைப்போல வெண்மை நிறம் கொண்ட மேகங்கள் வானில் உலாவித் திரிகின்றன எனும் கருத்து எமக்குள் எழுகின்றது. இயற்கையின் படைப்பதனை யதார்த்தமாக வெளிப்படுத்துவதில் ஹைக்கூ தனித்துவமானது. ஹைக்கூவை படியுங்கள்.

**என்ன வேண்டுதலோ**
**மொட்டை போட்டன மரங்கள்**
**இலையுதிர்காலம்**

இலையுதிர்காலத்தில் மரங்களின் இலைகள் கீழே உதிர்வது இயற்கையானது. ஆனால் இங்கு அவை வேண்டுதலின் காரணமாக மொட்டை போட்டுக் கொண்டன எனக்கூறுவது கற்பனையாகும். மரங்கள் இலைகள் இல்லாது வெறும் மொட்டையாக இருப்பதைக் காணும்போது, ஏதோ வேண்டுதல் போலும் அது தான் மரங்கள் மொட்டை போட்டுக் கொண்டன என்று எண்ணத் தோன்றுகின்றது அல்லவா?

### அனுபவத்தின் தரிசனம் ஹைக்கூ

இருவேறு காட்சிகளின் இணைப்புகளில் வெளிப்படும் கருத்தியலை அழகியலோடும், கலைத்துவத்தோடும் வெளிப்படுத்துவதில் ஹைக்கூ வல்லது. படிக்கும் வாசகர் தாமே இரசித்து இன்புறத்தக்கதாக ஹைக்கூ கட்டமைக்கப்படுவதாகும். கீழுள்ள ஹைக்கூ கவிதைகளை படியுங்கள்.

**மழையில் நனைந்தும்**
**கரையவில்லை வண்ணம்**
**மயில் தோகை**

**கண்ணில் தூசி**
**அவள் விழியில் தெரிகிறது**
**என் முகம்**

**பழைய குளம்**
**தவளை குதிக்கையில்**
**தண்ணீரில் சப்தம்**

ஹைக்கூ சிறியதாக இருக்கும் மிகப்பெரிய அற்புதம். எம் மனதை காந்தம்போல தன் வசம் இழுத்துக் கொள்ளும் சக்தி அதற்கு உள்ளது என்பதை மேலுள்ள ஹைக்கூ துளிகளைப் படிக்கும்போது புலனாகின்றது அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வாமையை ஏற்படுத்துகின்ற உணவுகளும் அவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலும்!

மருத்துவர் ஜெ.இவாஞ்சலின் மிர்நாளினி
பயிலுநர் மருத்துவ போசணைப் பிரிவு

ஒவ்வாமை எனப்படுவது உடலுக்குத் தீங்கு விளைவிக்காத காரணிகளுக்கு எதிராக எமது உடலின் நோய் எதிர்ப்புசக்தியை விளைவிக்கும் எதிர்வினையாகும். ஒவ்வாமையை ஏற்படுத்தும் காரணிகளாக உணவுக்கு எதிரான ஒவ்வாமை, பூச்சிகளின் சுரப்புக்கு எதிரான ஒவ்வாமை மற்றும் மருந்துகளுக்கு எதிரான ஒவ்வாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.


ஒவ்வாமை சம்பந்தமான நோய்களாக ஆஸ்துமா, தோல் நோய் மற்றும் உணவு ஒவ்வாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். கடந்த சில தசாப்தங்களாக உணவு ஒவ்வாமையானது உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளமை பல்வேறு ஆய்வுகளின்மூலம் தெரிய வந்துள்ளது. அத்துடன் இதற்கான ஒரு காரணமாக மேற்கத்தேய உணவு மற்றும் வாழ்க்கைமுறையை உலகம் முழுவதும் பரவலாகப் பின்பற்றுவது குறிப்பிடப்பட்டுள்ளது. தெற்காசிய நாடுகளில் உணவு ஒவ்வாமை குறைவெனினும் ஏனைய நாடுகளைப் போலவே எமது நாடுகளிலும் உணவு ஒவ்வாமை முன்னையதை விட அதிகரித்துச் செல்கிறது.



பொதுவாகக் குழந்தைகளிலும் சிறுவர்களிலும் அதிகளவில் உணவு ஒவ்வாமை காணப்படுகிறது. இலங்கையை பொறுத்தளவில் அதிகளவு உணவு ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவுகளாக பசுப்பால், இறைச்சி, நண்டு, இறால், முட்டை மற்றும் கோதுமை உணவுகள் காணப்படுகின்றன.

ஒவ்வாமையின்போது ஏற்படும் இலேசான அறிகுறிகளாக தோல் தடித்தல், சிவப்பு நிறம் அடைதல், கண்களில் அரிப்பு ஏற்படல், தும்மல், மூக்கிலிருந்து நீர்வடிதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சில சந்தர்ப்பங்களில் ஒருசிலருக்குப் பாரதூரமான அறிகுறிகளான மூச்சு விடுதலில் சிரமம், குருதியமுக்கம் குறைவதால் மயக்கம் ஏற்பட்டு மரணம் கூடச் சம்பவிக்கலாம்.

ஒவ்வாமை என்பதென்ன?




உணவின் மூலம் ஏற்படும் எல்லாத் தாக்கங்களும் உணவு ஒவ்வாமையல்ல. உதாரணமாக உணவு நஞ்சாதல் மற்றும் லக்டோஸ் சமிபாடு அடையாத நிலை என்பவை உணவு ஒவ்வாமையல்ல. உணவு ஒவ்வாமை தாக்கமானது, பொதுவாக உணவு உட்கொள்ளும்போது அல்லது உட்கொண்ட சில நிமிடங்களில் தொடங்கும். ஆனால் ஏனைய தாக்கங்கள் உணவு உண்ட பின் சில மணித்தியாலங்களின் பின்னரே ஆரம்பிக்கும். உணவு ஒவ்வாமையானது ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவை ஒவ்வொரு முறை உண்ணும் போதும் ஏற்படும்.

பொதுவாக உணவுக்கு எதிரான எல்லாத் தாக்கங்களும் உணவு ஒவ்வாமையாகப் பலராலும் கருதப்படுகிறது. ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவை முற்றாகத் தவிர்ப்பதுவே உணவு ஒவ்வாமைக்கு வழங்கப்படும் தீர்வாகும். உணவுக்கு ஏற்படும் ஏனைய தாக்கங்களுக்கு உணவை முற்றாகத் தவிர்ப்பது அவசியமற்றது. எனவே சரியான முறையில் உணவு ஒவ்வாமையைக் கண்டறிந்தலானது, உடலுக்குத் தேவையான போஷாக்கான உணவுகளை தேவையற்ற விதத்தில் தவிர்ப்பதைக் குறைக்கும்.

உணவு ஒவ்வாமையானது ஒரு குறைவான வயதில் உள்ள குழந்தைகளில் அதிகமாக காணப்பட்டு வயது அதிகரிக்கும் போது குறைவடைந்து செல்லும். இவ்வாறு உணவு ஒவ்வாமை குறைவடைதலானது ஒவ்வொரு உணவுப் பொருள்களுக்கிடையில் வேறுபடுகிறது. உதாரணமாக பசுப்பால், இறைச்சி, முட்டை, கோதுமை போன்றவற்றுக்கு ஏற்படும் ஒவ்வாமை சில வருடங்களிலேயே முற்றாக இல்லாது போய்விடும். ஆனால் நிலக்கடலை, பாதாம், நண்டு மற்றும் இறால் போன்ற உணவுகளின் ஒவ்வாமை பெரும்பாலும் குறைவடையாது வாழ்க்கைக் காலம் முழுவதும் நீடிக்கும். அதேபோன்று குழந்தை பருவத்தைவிட வயது வந்தோரில் தொடங்கும் ஒவ்வாமையும் நீண்ட காலத்துக்கு நீடிக்கலாம். எனவே உணவு ஒவ்வாமை குறையும்போது படிப்படியாக ஒவ்வாமைக்குரிய உணவுகளை மருத்துவ ஆலோசனையுடன் மீண்டும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

எனவே உணவு ஒவ்வாமையைக் கண்டறியவும், கண்டறியப்பட்ட ஒவ்வாமை குறைவடைகின்றதா எனப் பரிசோதிக்கவும் மருத்துவ ஆலோசனை பெறல் மிக முக்கியமானது. இந்தப் பரிசோதனைகளில் ஒவ்வாமை குறைவடைவது கண்டறியப்பட்டால் ஒவ்வாமைக்குரிய உணவுகளை மருத்துவ ஆலோசனையின்படி படிப்படியாக ஆரம்பிக்கமுடியும். இவ்வாறு ஒவ்வாமை உணவுகளை மீள ஆரம்பிக்கும்போது நன்கு சமைக்கப்பட்ட மிகக் குறைந்த அளவான உணவே முதலில் வழங்கப்படும். பின்னர் படிப்படியாக உணவின் அளவு அதிகரிக்கப்படுவதுடன் குறைந்த நேரத்தில் சமைக்கும் உணவுகளும் வழங்கப்படும். இவ்வாறு படிப்படியாக அதிகரிக்கும்போது மருத்துவ ஆலோசனைப்படி மீள அறிமுகப்படுத்தல் மிக அவசியமானது.

உணவு ஒவ்வாமையை உடைய ஒருவருக்கு மீள அந்த உணவுகளை ஆரம்பிப்பது சிக்கலான செயன்முறையாக இருந்தபோதிலும், அவ்வாறு ஆரம்பித்தல் மிக அவசியம். ஏனெனில் ஒவ்வாமை அதிகளவில் குழந்தை பருவத்தில் காணப்படுவதால் வளர்ச்சி மற்றும் விருத்திக்குத் தேவையான போஷணை மிகுந்த உணவுகளை உண்ண முடியாமல் அவர்களின் வளர்ச்சி குறைவது கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல் ஒவ்வாமை எதிர்வினைத் தாக்கங்களாலும் அவர்களில் போஷணை இழப்பு ஏற்படுகிறது. ஒவ்வாமை ஏற்படும் குழந்தைகள் உணவு மறுப்பவர்களாகவும் புதுவித உணவுகளை உண்ண தயக்கம் உடையவர்களாகவும் இருப்பர். அத்துடன் ஒவ்வாமையினால் பல உணவுகளைத் தவிர்க்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும். இவையனைத்தும் வளர்ச்சி மற்றும் விருத்திக் குறைபாட்டுக்கு வழிகோலும். அத்துடன் ஒவ்வாமையானது தனி நபருக்கு மாத்திரமன்றி மொத்தக் குடும்பத்துக்கும் உளரீதியாகவும் பண ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

வருமுன் தடுக்க...

உணவு ஒவ்வாமையை வரும்முன் தடுக்க குழந்தைகளுக்கு ஆறு மாதம் வரை தாய்ப்பால் மட்டும் கொடுத்தல் அவசியம். அத்துடன் ஆறு மாதத்தின் பின் நிரப்பு உணவுகளை வழங்கும் போதும் படிப்படியாக அனைத்து வகையான உணவுகளை வழங்குவதும் பின்பு ஒவ்வாமை ஏற்படும் அளவைக் குறைக்கும்.

எம்மில் பலருக்கு உணவு ஒவ்வாமை இல்லாதிருந்த போதிலும் உணவு ஒவ்வாமை ஏற்படலாம் அந்தத் தயக்கத்தினாலும், ஒவ்வாமை தவிர்ந்த ஏனைய உணவுக்கான தாக்கங்களை ஒவ்வாமை எனக் கருதுவதாலும் சில வகையான போஷாக்கான உணவுகளை தேவையற்ற விதத்தில் தவிர்ப்பதுண்டு. இது அத்தியாவசியமற்ற எமக்கு போஷணைக் குறைபாட்டை விளைவிக்கக் கூடிய ஒரு செயன்முறையாகும். எனவே ஒவ்வாமையை சரியான முறையில் இனங்கண்டு, தேவையற்ற விதத்தில் உணவு தவிர்த்தலை மட்டுப்படுத்தி, சரியான காலத்தில் மருத்துவ ஆலோசனைப்படி உணவு மீள அறிமுகம் செய்வதன் மூலம் போசணைக் குறைபாட்டையும் அதன் தாக்கங்களையும் தவிர்த்துக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா!


வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில் வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.


கிளிநொச்சி கூட்டுறவாளர் கலாசார மண்டபத்தில், வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபாவதி கேதீஸ்வரன், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் கலாபூஷணம் வே.இறைபிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, பண்பாட்டுப்பவனி, ஊர்திப் பவனி என்பன வெளவ்வேறு இடங்களில் இருந்து ஆரம்பமாகி விழா மண்டபத்தை வந்தடைந்தன. தொடர்ந்து கிளிநொச்சி திறன்விருத்தி மண்டபத்தில் பாரம்பரியப் பொருள்களின் கண்காட்சி அதிதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் குறித்த காண்பியக்கூடக் கண்காட்சியானது இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. தொடர்ந்து, 'அமரர் கலாபூஷணம் அப்பச்சி வல்லிபுரம் அரங்கில்' அரங்க நிகழ்வுகள் சிறப்புற ஆரம்பமாகின. அரங்கத் திறப்புரையினை கலாபூஷணம் சிவ ஏழுமலைப்பிள்ளை நிகழ்த்தினார். மேலும், பல்வேறுபட்ட கலை, கலாசார நிகழ்வுகள், வடந்தை நூல் வெளியீடு, சிறந்த நூற் பரிசு வழங்குதல், கலைக்குரிசில் விருது வழங்குதல், இளங்கலைஞர் விருது வழங்குதல், அதிதிகளின் உரைகள் முதலான பல்வேறுபட்ட கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் சமயத் தலைவர்கள், வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர்(காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பல்வேறுபட்ட திணைக்களங்களின் அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறுபட்ட தரப்பினரும் கலந்துகொண்டனர்.







வலி. வடக்குப் பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

வலி.வடக்குப் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ் சிறப்பு விருந்தினரகாவும், யூனியன் கல்லூரி அதிபர் தில்லையம்பலம் விருந்தினரகாவும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்கப்பட்டது கிரிக்கெட் இடைக்காலக் குழு

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் நியமிக்கப்பட்ட இடைக்கால கிரிக்கெட் குழுவைரத்துச்செய்யவிளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தீர்மானித்துள்ளார்.

இடைக்காலக் குழுவை நியமிக்கும் தீர்மானத்தை ரத்துச் செய்யும் வர்த்தமானியில் கையொப்பமிட்டதாக அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் தடையை நீக்கும் நோக்கில் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)


## வாடகைக்கு

சங்காத்தானை இந்துக்கல்லூரி பாடசாலைக்கு அருகாமையில் ஒரு வீடும் அறைகளும் வாடகைக்கு உள்ளது.

**077 033 9477**

## பெயர்மாற்றம்

உடுவில் தெற்கு. புதுமடம் மானிப்பாயில் வசிக்கும் **யுவராசன் ஆதித்தியா** ஆகிய நான் எனது பெயரை **யுவராசன் ஸ்ரேஷா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **யுவராசன் ஸ்ரேஷா** என்றே கையொப்பம் இடுவேன் என ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cs53169) (N.1) **யுவராசன் ஸ்ரேஷா**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 28.01.1940 மறைவு 09.12.2023

எமது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்
**ராஜ்குமார் செல்வாஜினி** அவர்களின் அன்புத் தந்தையார்
**கந்தையா சதாசிவம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CR 411598) S-1

*பிரிவால் துயருறும்:*
**யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

## யாழ். மாவட்ட விஸ்வகர்ம நகைத்தொழிலாளர் சங்கம்

## கௌரவிப்பும் கண்ணாடி வழங்குதலும்

**2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளுக்கு மேல் பெற்ற**

விஸ்வகுல நகைத்தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களை கௌரவித்தலும், வருமானம் குறைந்த நகைத்தொழில் செய்துகொண்டு இருக்கும் கண்பார்வை குறைபாடு உடைய நகைத்தொழிலாளர்களுக்கு

**கண்பரிசோதனை மேற்கொண்டு பெறுமதிவாய்ந்த மூக்கு கண்ணாடியும் வழங்க உள்ளோம்.**

**உங்கள் விண்ணப்பங்களை 31.12.2023 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்**

Whatsapp : 077 222 8482 T.P.: 077 236 7494

இல.213/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (cs.53170) (N.1) ஜெ.மனோகர் செயலாளர்.

## த பினான்ஸ் கம்பனி பிஎல்சி

(கலைப்பின் கீழ்)

கொழும்பு மேல்மாகாண வர்த்தக உயர் நீதிமன்றம் (சிவில்)
வழக்கு இல: CHC 19 /2021/CO

## அறிவித்தல்

### கடன் வாங்கியோர் மற்றும் காணிகள் வாங்கியோருக்கு

**வாகனப் பதிவுப் புத்தகங்களை விடுவித்தல், ஈட்டு முறிகளை இரத்து செய்தல் மற்றும் காணி உறுதிகளை வழங்குதல்**

கம்பனிக்கு உரிய நிலுவைகளை முற்றாக செலுத்திய கடன் வாங்கியோர் மற்றும் காணிகள் வாங்கியோர் கம்பனியுடன் தொடர்பு கொண்டு உடனே அவர்களின் வாகனப்பதிவுப் புத்தகங்களை விடுவித்துக் கொள்ளும்படியும் ஈட்டுமுறிகளை இரத்து செய்து கொள்ளும்படியும் காணி உறுதிகளை பெற்றுக்கொள்ளும்படியும் கோரப்படுகின்றனர்.

விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி - 2024 ஜனவரி 31ம் திகதி

**கடன்களை தீர்த்தல் மற்றும் காணிகளுக்கான கொள்வனவு விலை மீதியைச் செலுத்துதல்**

கடன் வாங்கியோர் மற்றும் காணிகள் வாங்கியோர் தமது கடன் நிலுவைகள், கொள்வனவு விலை மீதிகள் மற்றும் கம்பனிக்கு உரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தி அவர்களின் வாகனப்பதிவுப் புத்தகங்கள், ஈட்டு முறிகள் மற்றும் காணி உறுதிகளை முடிந்தளவு முன்னதாக விடுவித்துப் பெற்றுக்கொள்ளும்படி கோரப்படுகின்றனர். கம்பனிக்கு உரிய நிலுவைகளை செலுத்துவதில் மேலும் தாமதித்தல் அவர்களுக்கு எதிராக மேலதிக அபராதங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு ஏதுவாகும்.

விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்.
Rambukwella - 071 0734400 அல்லது Jalaldeen - 077 6550045

**G. J. David**
Liquidator,
The Finance Company PLC (Under Liquidation)
No.55, R A De Mel Mawatha,
Colombo 04. TP - 011 2557888

## வீடு வாடகைக்கு

யாழ். ஆனைப்பந்தியில் விசாலமான **7 அறை, 3 களஞ்சிய அறை, வாகன தரிப்பிட வசதிகளுடனும்** கூடிய வீடு வாடகைக்கு உண்டு **அலுவலக, களஞ்சிய பாவனைகளுக்கு உகந்தது.**

தொடர்பு : **077 259 5672**


## வீடு விற்பனைக்கு

யாழ். நல்லூர் பகுதியில் சுற்று மதிலுடன் கூடிய 1 ½ பரப்புக் காணியில் இரண்டு அறைகளுடன் கூடிய வடக்கு வாசல் வீடு அமைதியான சூழலில் விற்பனைக்குண்டு.

(cr 41301)(N.1)

தொடர்பு: **077 933 7329**
**070 170 0976**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சாவகச்சேரி அம்பிகா மருந்தக உரிமையாளர்
**நமசிவாயம் சிவபாலன்**
அவர்கள் 11.12.2023 அன்று
**சாவகச்சேரி மாவட்ட நீதிபதி**
**ஏ.ஜூட்சன்**
முன்னிலையில் இலங்கைத் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு மனமுவந்து பாராட்டுவதுடன் அவர் மென்மேலும் அர்ப்பணிப்பான சேவையினை மக்களுக்கு வழங்க வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**மணிவர்ணன் குடும்பம் சாவகச்சேரி / நல்லூர்**
**வாணி ரெக்ஸ் யாழ்ப்பாணம் உரிமையாளரும் ஊழியர்களும்**

## வாணி ரெக்ஸ்

## விசேட விலைக் கழிவுகள்

**வேக்கிங் விசா / விசிற்றிங் விசா** மூலம் கனடா அல்லது ஏனைய வெளிநாடுகளுக்கு செல்பவரா நீங்கள் அந்த நாட்டு கால நிலைக்கேற்றதான அனைத்து விதமான

- **Jacket** (ஆண் / பெண்/சிறுவர்கள்)
- கோட் சூட் (ஆண்/பெண்)
- **Sweater** வகைகள்
- **Cap** / மௌப்ளர் வகைகள்
- பிளாங்கற் வகைகள்
- **Luggage Bag** அனைத்து அளவுகள்

மேலும் ஆண்கள் பெண்கள் சிறுவர்களுக்கான தரமான ஆடைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



## வாணி ரெக்ஸ்

No-81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 5578, 021 222 9286**


## பன்றிகளுக்கு உணவாக 5,000 சேவல் குஞ்சுகள்!

ஒரு வாரத்துக்கு சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிக் குஞ்சுகள் பன்றிகளுக்கு உணவளிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று விவசாய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சேவல் குஞ்சுகள் ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாமையால் பன்றிகளுக்கு உணவளிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இறைச்சிக்காக கோழி வளர்ப்பில் ஈடுபடும் பண்ணைகளுக்கு சேவல் குஞ்சுகளை விநியோகம் செய்ய தேசிய கால்நடை மேம்பாட்டுச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. வேலையில்லாதவர்களுக்கு சேவல் குஞ்சுகளை இலவசமாக வழங்கி வருமானத்தை அதிகரிக்கும் புதிய வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார். இதே வேளை-முட்டை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தலா 10 அல்லது 20 பேட்டுக் கோழி குஞ்சுகளை இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் முன்னெடுக்கப்படும்

# தமிழர்களை மையப்படுத்திய பதிவுகளை உடன் நிறுத்துக

**கூட்டமைப்பு வலியுறுத்து**

கொழும்பு, டிசெ. 13

சிவில் நிர்வாகத்துக்குப் புறம்பான வகையில், கொழும்பில் வாழும் தமிழ் மக்களை மையப்படுத்தி இடம்பெறும் பொலிஸ் பதிவுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறிதரன் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கொழும்பில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழர்களை அளவீடு செய்தல், அவர்களின் விவரங்களைப் பெறுதல் என்பன நாட்டின் சிவில் நிர்வாகத்துக்கு முரணாக நாட்டின் நடைமுறைக்கு முரணாக நடைபெறுவதை நாடாளுமன்றத்தில் மனோ கணேசன் நேற்று (நேற்றுமுன்தினம்) சுட்டிக்காட்டி இருந்தார். கொழும்பை மையப்படுத்தி வாழும் தமிழ் மக்கள் இது தொடர்பில் எமது கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளனர். சிங்களத்தில் அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவங்களைக் கொண்டுவந்து பொலிஸார் வழங்குகின்றனர். நாட்டில் சனத்தொகை கணக்கெடுப்பு நடக்கின்றது. இந்நிலையில் கொழும்பில் பொலிஸார் எதற்காக இந்த நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். ஆள்பதிவுத் திணைக்களம் இருக்கின்றது. அதன் ஊடாக நடவடிக்கை இடம்பெற்றால் அது சிவில் நடவடிக்கையாக இருக்கும். எதற்காக கொழும்பில் உள்ள தமிழர் விவரம் அறிய சிங்களப் பொலிஸார், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்? நாடு பூராகவும் சனத்தொகை கணக்கிடப்படுகின்றது. அந்த நடவடிக்கை இடம்பெறட்டும், பொலிஸ் பதிவை நிறுத்துங்கள்' - என்றார்.

(அ-ம-44)

கந்தகாடு முகாமிலிருந்து

# தப்பிச்சென்ற கைதிகளில் 129 பேர் மீண்டும் கைது!

கொழும்பு, டிசெ. 13

வெலிகந்த கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இருந்து நேற்றிரவு தப்பிச் சென்ற 138 கைதிகளில் 129 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய 9 கைதிகளை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீதிமன்ற உத்தரவுக்கமைய போதைக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வளிக்கப்படும் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரண்டு தடவைகள் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக 138 கைதிகள் தப்பிச் சென்றிருந்தனர். இதையடுத்து அவர்களை தேடும் பணியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

பொலநறுவை -சோமாவதிய வீதியில் சுங்கவில வனப் பிரதேசத்தில் குறித்த தேடுதல் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, தப்பியோடிய கைதிகளில் 102 பேர் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில், நேற்றுக் காலை மற்றும் பிற்பகல் பாதுகாப்புப் படையினரால் மேலும் 27 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 78 பேர் நேற்று பொலநறுவை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், அவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ம)



# இலங்கையுடனான உறவை சிங்கப்பூர் வலுப்படுத்தும்

கொழும்பு, டிசெ. 13

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையில் தற்போதுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக உறவுகளை வலுப்படுத்த சிங்கப்பூர் உறுதிபூண்டுள்ளது என்று பிரதமர் லீ சியென் லொங் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் சிங்கப்பூருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இடம்பெற்ற இருதரப்பு கலந்துரையாடல்களைப் பாராட்டி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள விசேட கடிதத்திலேயே சிங்கப்பூர் பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களின் அனுகூலமான முடிவுகளுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ள பிரதமர் லீ சியென் லொங், இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை விரைவில் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ம-44)

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 • 06 • 1948



இறப்பு 12 • 12 • 2023

திருமதி

**பஞ்சபாகேசசர்மா இந்திராட்சி**

நீர்வேலி கந்தசாமி கோயிலடியை பிறப்பிடமாகவும், ஆவரங்கால் சிவன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சபாகேசசர்மா இந்திராட்சி அவர்கள் நேற்று (12.12.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாத இராஜேந்திர குருக்கள் (நீர்வேலி கந்தசாமி கோவில் பிரதம குரு) சம்பூநாதேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், அண்ணாச்சாமி ஐயர் தாட்சாயிணி அம்மாவின் மருமகளும், பஞ்சபாகேசசர்மா (இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (13.12.2023) காலை 10 மணியளவில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக, ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. பஞ்சபாகேசசர்மா (கணவர்)
ஆவரங்கால்
021 205 8104

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 12 • 1960



மறைவு 12 • 12 • 2023

**கனகரத்தினம் அருள்நாதன்**

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டி 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் அருள்நாதன் நேற்று (12.12.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் கலாவல்லியின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் சின்னப்பிள்ளையின் அன்பு மருமகனும் வசந்தலீலாவின் அன்புக் கணவரும் மதுரா (மாணவி - யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), விதுஜா (மாணவி - யாழ்/ இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் பிறேமவல்லி (ஓய்வு நிலை அதிபர் - யாழ்/ நாரந்தனை கணேச வித்தியாலயம்), மதிவதனி (அசிரியர் - யாழ்/ இந்து மகளிர் கல்லூரி) பிரியதர்சினி (ஆசிரியர் - யாழ்/ கொக்குவில் ஸ்ரீ ராமகிருஸ்ண வித்தியாலயம்), சசிகலை (ஆசிரியர் - யாழ்/ தம்பாட்டி அ.த.க வித்தியாலயம்), இரவீந்திரநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், யோகநாதன், லலிதாம்பிகை காலஞ்சென்றவர்களான ராங்கநாதன், சாந்தகுமாரி, புஸ்பகலா மற்றும் ஜங்கரன், சற்குணராஜா, விக்கினராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2023) புதன்கிழமை ந.ப 12.00 மணியளவில் நாரந்தனை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 27359 JJ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்

# இராஜதந்திர அணுகுமுறையே தடுப்பதற்குச் சரியான வழியாம்!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது இரு நாடுகளுக்கும் இடையிலான விடயம் என்பதால் இராஜதந்திர ரீதியிலேயே அதனை அணுக வேண்டியுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.


ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'2024ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சுக்காக சுமார் 8 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 6 ஆயிரத்து 77 மில்லியன் ரூபா மூலதனச் செலவாகவும் 2 ஆயிரத்து 323 மில்லியன் ரூபா மீண்டுவரும் செலவாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் உட்பட அவர்களின் முன்னேற்றத்தையும், நாட்டின் அபிவிருத்தியையும் எவ்வாறு நாங்கள் சிறப்பாக முன்னெடுக்கலாம் என்று திட்டங்களை வகுத்திருக்கின்றோம்.

அரசின் இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக எமது நாட்டின் கடற்றொழிலை வளப்படுத்தும் வகையில் மேலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் முதலீடுகளையும் ஊக்குவித்து வருகின்றோம்.

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரச்சினையைப் பொறுத்தவரை, அது இரு நாடுகளுக்கும் இடையிலான விடயம் என்பதால் இராஜதந்திர ரீதியிலேயே அதனை அணுகவேண்டியுள்ளது. இந்திய அரசமைப்பின் பிரகாரம் மீன்பிடி விடயம் மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டது. எனவே அது தொடர்பில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நேரடியாக இந்தியாவுக்கே சென்று பாண்டிச்சேரி மற்றும் தமிழ் நாட்டு மாநில ஆட்சியாளர்களுடன் கலந்துரையாடுவதே சிறந்த தீர்வாக அமையும் என்பதே எனது நிலைப்பாடாகும் - என்றார். (அ.ம44)



# காஸாவை இஸ்ரேல் ஆக்கிரமிக்காதாம்!

டெல்அவிவ், டிசெ. 13

காசாவில் நிரந்தரமாக இருந்துவிடும் எண்ணம் இஸ்ரேலுக்கு இல்லை என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலன்ட் தெரிவித்துள்ளார்.

மாறாக காஸா பகுதியை எவர் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள் என்ற ஆலோசனையில் ஈடுபட இஸ்ரேல் தயாராக இருக்கிறது. காஸாவில் அதிகாரம் செலுத்தப்போவது இஸ்ரேலுக்கு விரோதமான குழுவாக இல்லாமல் இருப்பது மட்டும் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

நிரந்தரத் தீர்வுக்காக ஈரான் ஆதரவு ஹெஸ்புல்லாக்களுடன் கூட ஆலோசனை நடத்த இஸ்ரேல் தயாராகவே இருக்கிறது. ஆனால் எல்லைப் பாதுகாப்புக்கு உரிய உத்தரவாதம் அளித்தால் மட்டுமே அது சாத்தியம். ஹமாஸ் குழுவினர் தாமாக முன்வந்து சரணடையலாம். அவ்வாறு சரணடைந்தால் அவர்கள் உயிராவது மிஞ்சும். இல்லாவிட்டால் அவர்களின் விதி எங்கள் கைகளில் என்றும் அவர் கூறினார். (ம)

---

### புத்தாண்டில்...

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்பார்த்த வருமானத்தை ஈட்ட முடியாததன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்டக் கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. அதனால் வரிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சகல நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய 15 சதவீதமாகக் காணப்பட்ட வற்வரி 3 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்சாரம், இரசாயன உரம், மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், குழந்தைகளுக்கான பால்மா போன்ற 43 பொருள்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. வற்வரி தொடர்பில் போலியான தகவல்கள் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் பரப்பப்படுகின்றன.

வரவு மற்றும் செலவுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்கும் வகையிலேயே இம்முறை வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யாவிட்டால், அரசாங்கத்தை நிர்வகித்துச் செல்லமுடியாது. எவர் ஆட்சியைப் பொறுப்பேற்றாலும் இரு வாரங்களுக்கு மேல் அவர்களால் ஆட்சியைக் கொண்டு செல்லவும் முடியாது.

இந்தியா, சீனா, பிரான்ஸ், ஜப்பான் என்பவை எமக்குக் கடன் சலுகைகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. கடன் மறுசீரமைப்புகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டால் எதிர்வரும் காலங்களில் வற்வரியைக் குறைக்கமுடியும். அதற்கமைய முடிந்தளவு மக்களுக்கான சலுகைகளை வழங்க முடியும் என்று ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார் - என்றார். (அ-ம)

### விளையாட்டுப்...

எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக ஆயிரத்து 500 மில்லியன் ரூபா அடுத்த வருடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமிய ரீதியில் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு அந்த நிதி பயன்படுத்தப்படும். அதேவேளை விளையாட்டுக்களில் திறமையை வெளிப்படுத்தாத பாடசாலைகளை விளையாட்டுத்துறைப் பாடசாலைகளாகப் பெயரிடுவது பொருத்தமற்றது. தற்போதைய விளையாட்டுப் பாடசாலைத் திட்டம் தோல்வியடைந்துள்ளது - என்றார். (அ-ம)

### தத்திகள்...

தத்தித் தாக்கம் தொடர்பில் விவசாயிகள் கலந்துரையாடலில் தமது கருத்துகளை முன்வைத்து, இழப்பீட்டின் அவசியம் தொடர்பில் வலியுறுத்தியபோதே யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயிர் அழிவுகளுக்குக் காப்புறுதி முறைமை காணப்படுகின்றபோதிலும், பல நிறுவனங்கள் உரிய முறைமைகளைக் கடைப்பிடிப்பதில்லை. தத்திகளால் ஏற்பட்ட பயிரழிவுகளுக்கு இம்முறை இழப்பீடு வழங்கப்படச் சாத்தியங்கள் மிகக்குறைவு. ஏனெனில் அரசாங்கத்திடம் பணமில்லை. எனினும், யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளால் முன்வைக்கப்படும் அனைத்துக் கோரிக்கைக் கடிதங்களும் உரிய முறையில் என்னால் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும் - என்றார். (அ-ம-125)

### புதிய...

களத்தின் விதைகள் அத்தாட்சிப்படுத்தும் சேவைப்பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி றமணீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விவசாயக் குழுக்கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வகை நெல்லினங்கள் இம்முறை வடக்கில் அறிமுகப்படுத்தப்பட்டன. நான்கு மாதத்தில் விளைச்சல் தருகின்றது என்று தெரிவித்தே வடக்கில் இந்த நெல்லை அறிமுகப்படுத்தினார்கள். இலங்கையின் வேறெந்தப் பகுதியிலும் இந்த வகை நெல்லினம் அறிமுகப்படுத்தப்படவில்லை. இந்த நெல்லினம் ஒரு வகை நோயைத் தாக்கும் திறனைப் பெற்றிருந்தாலும் பிறிதொரு வகை நோயால் இலகுவில் பாதிக்கப்படும். இவ்வாறிருக்கையில் இதனை வடக்கில் மாத்திரம் அறிமுகப்படுத்தியமைக்கு என்ன காரணம்? என்று தெரியவில்லை - என்றார். (அ-ம-125)

### விக்கிரகங்களைத்...

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தெ.மேனன் தலைமையில், உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் உள்ளிட்டோரை உள்ளடக்கிய குழுவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேநபர் கொக்குவிலைச் சேர்ந்தவர் என்றும், 27 வயதுடையவர் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபரான பூசாரி ஹெரோய்னுக்கு அடிமையானவர் என்றும், ஹெரோய்ன் கொள்வனவுக்காகவே அவர் இந்த நகைகளைத் திருடியுள்ளார் எனவும் பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்தனர். (அ-ம-26)

### உறவுகளை...

யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவீரர் குடும்பங்களைக் கௌரவிக்க முற்பட்ட ஏற்பாட்டுக்குழுவினரைக்கூட கைது செய்துள்ளீர்கள். முதலில் இந்த மனநிலையை மாற்றுங்கள். இந்த நாட்டில் ஜனநாயகம் எங்கே? நல்லிணக்கம் என்பது உதட்டளவில் மட்டுமே உள்ளது. இறந்துபோன தமது உறவுகளைக் கற்பூரம் ஏற்றி, மெழுகுவர்த்தி ஏற்றி, இடங்களைச் சுத்தப்படுத்தி, அவர்களுக்குப் பிடித்த சிவப்பு, மஞ்சள் கொடிகளை வைத்து நினைவுகூரும் உரித்துகூட இந்த நாட்டில் இல்லையா? கைது வேட்டைகள்மூலம் அப்பாவி மக்களின் இயல்பு வாழ்க்கையில் அச்சத்தை ஏற்படுத்த முற்படவேண்டாம்.

நல்லிணக்க முயற்சி இடம்பெறுகின்றது, வணக்கம் செலுத்த இடமளிக்கபடுகின்றது என சர்வதேசத்துக்குக் கூறப்பட்டாலும் நவம்பர் 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் பொலிஸ் பயங்கரவாதம் தாண்டவமாடியது. துயிலும் இல்லங்களின் தற்காலிக வளைவுகள்கூட உடைக்கப்பட்டன. அதேவேளை, பிரபாகரனின் பிறந்ததினம் பற்றிய செய்தி மற்றும் படம் பிரசுரித்தமைக்காக 'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர், செய்தி ஆசிரியர் ஆகியோர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தனித்தனியாக விசாரிக்கப்பட்டுள்ளனர்' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்காக ரணில் மோசடிகளுக்கு ஆதரவு

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.



**கொழும்பு, டிசெ.13**

**ஜனாதிபதியின் அமைச்சரவையில் தான் எரிபொருள், மின்சாரக் கொள்வனவு மோசடியாளர்கள் உள்ளார்கள். ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஊழல் மோசடிகளைக் கவனத்தில் கொள்ளாமல் ஜனாதிபதி செயற்படுகிறார். மாத்தறை மாவட்டத்தின் ஆதரவு அவருக்கு முக்கியமானது என்பதால் ஊழலுக்கு கதவுகளைத் திறந்துள்ளார்.**

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1987ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 120 பில்லியன் ரூபாவை மாத்திரம்நேரடி முதலீட்டை இலங்கை பெற்றுக்கொண்டுள்ளது. ஆனால், வியட்நாம், தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் இலங்கையைக் காட்டிலும் குறுகிய காலப்பகுதிக்குள் பல பில்லியனை நேரடியான முதலீடாகப் பெற்றுக்கொண்டுள்ளன.

நிலக்கரி, எரிபொருள் கொள்வனவில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. மோசடி செய்தவர்கள் ஜனாதிபதியின் அமைச்சரவையில் உள்ளார்கள். பூநகரி மின்னுற்பத்தித் திட்டத்தில் 500 மெகாவாட்ஸ் அலகை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுஎன்ன ஆட்சியாளர்களின் சொத்தா? ஒரு சில மோசடி அதிகாரிகள் தேவை. மோசடியான அமைச்சர்களும் தேவை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார். மறுபுறம் சாகல ரத்நாயக்க சகல மோசடிகளிலும் முன்னிலையில் உள்ளார் - என்றார். (எ-இ)

**தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் சில்லறைக் கடைக்கு காசாளர் தேவை.

வயது: 45-60

**076 698 5728**

# இந்தியாவின் உதவியுடன் தொழில்நுட்பப் பல்கலை!

கொழும்பு, டிசெ.13

இந்தியாவின் உதவியுடன் புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். 2035ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது நாட்டை தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றமடைந்த நாடாக அறிமுகமாக்கும் நிலை ஏற்படும் என தொழில்நுட்ப அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அடிப்படை இல்லாமல் நாம் முன்னேறிச் செல்லமுடியாது - நாட்டை முன்னேற்றமுடியாது. நாங்கள் நவீன தொழில்நுட்ப விவசாய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

எங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பே இருக்கிறது. அதன் மூலம் நாங்கள் இயன்றளவு பயனைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

நாங்கள் புதிய பல்கலைக்கழகங்களை அமைப்போம். இந்தியாவின் உதவியுடன் புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கொத்தலாவல பல்கலைக்கழகத்துக்கு குருணாகலை மற்றும் சீதாவக ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களையும் இணைப்போம் - என்றார். (எ-இ)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு**



மண்ணில் 28 . 09 . 1948

விண்ணில் 13 . 11 . 2023

**அமரர் செல்வரத்தினம் சின்னம்மா**

கடந்த (13.11.2023) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் செல்வரத்தினம் சின்னம்மா அவர்களின் 31ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (13.12.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இல- 47, சபாபதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

A/L தொழினுட்பப்பிரிவு

Techna Technical Institute

Smart thinking leads to innovate

விசேட செயலமர்வு

077 170 3549

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

**A/L 2023**

தொழினுட்ப பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு
16, 17 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

பொறியியல் தொழினுட்பவியல்
S.மயூரதன்
16, 17 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
S.சக்தி
16, 17 DEC மாலை 12.30 - 4.30 மணி வரை

தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
T.லவன்
விவசாய விஞ்ஞானம்
S.சஜீபன்
கணிதம்
T.சசிகரன்
புவியியல்
S.Pகரன்
23, 24 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

அனுமதிகளுக்கு 15/12/2023 முன் முற்பதிவுகளை நேரடியாக அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 24 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல். குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* உரிய அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ள முடியும்.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **077 468 3354**
**076 755 8606**

(CS 27307) A-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org